*கவனிக்க .- 15.11.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1838 - 2013 නොවැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2013.11.22

*1838 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV(அ) – மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | 2380 |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| | - |

### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*
### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# துணை விதிகள்

**பலாங்கொடை பிரதேச சபை**

துணைவிதிகள்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவின்கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் பலாங்கொடை பிரதேச சபையினால் சம்மதிக்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள துணைவிதிகள் பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண சபை உள்ளூராட்சி விடயப் பொறுப்பான அமைச்சராகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர்,
சப்ரகமுவ மாகாணம்.

சப்ரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2012.06.11.

**பலாங்கொடை பிரதேச சபையின் திரவ பெற்றோலிய வாயுவினால் இயங்கும் பிரேத தகனக் கூடம் தொடர்பான துணைச்சட்டம்**

1. இத் துணைச் சட்டம் பலாங்கொடை பிரதேச சபையின் திரவ பெற்றோலிய வாயுவினால் இயங்கும் பிரேத தகனக்கூடம் தொடர்பான துணைச்சட்டம் ஆகும்.

2. பலாங்கொடை பிரதேச சபைக்கு உரித்தான பிரேத தகனக் கூடத்தில் பிரேதங்களை எரித்தல், கட்டணங்களை தீர்மானித்தல், அறவிடல் மற்றும் தகனக் கூடத்தின் நிர்வாகத்தினை சீரமைத்தல் தொடர்பாக இத்துணைச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

3. பலாங்கொடை பிரதேச சபையின் தலைவர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரி ஒருவரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்று இல்லாமல் பிரேத தகனக்கூடத்தில் எந்தவொரு பிரேதத்தினையும் எரித்தல் கூடாது.

4. மூன்றாம் துணைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள எதிர்ப்பார்க்கும் நபர் (இதன் பின்னர் விண்ணப்பதாரி என குறிப்பிடப்படும்) நபரால் ''அ'' பட்டியலுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பித்தினை கீழ்காணும் ஆவணங்களுடன் சபை தலைவரிடம் கையளிக்க வேண்டும்.

   i. உயிரிழந்த நபர் மற்றும் விண்ணப்பதாரிக்கு உள்ள உறவு முறையினை உறுதிப்படுத்தும் பொருட்டு உயிரிழந்த நபர் வசித்த கிராம சேவையாளர் பிரிவின் கிராம சேவையாளரால் வழங்கப்படும் சான்றிதழ் ;

   ii. விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டையின் பிரதி ;

   iii. உயிரிழந்த நபரின் மரணம் தொடர்பாக குற்றவியல் வழக்கு சட்ட விதிக் கோவையின் கீழ் விசாரணைகள் நடத்தப்பட்டிருப்பின், விசாரணை நடத்திய பிரேத பரிசோதகரால் அல்லது நீதிபதியால் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சட்டத்தின் 41 (இ) ஆம் பிரிவின் கீழ் பிரேத எரிப்பு தொடர்பாக அனுமதி வழங்கும் சான்றிதழில் 7 ஆவது வரியில் பிரேத எரிப்பு கூடத்தில் எரித்தல் என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் ;

   iv. இறந்து பிறந்த உடல் எனின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு சட்டத்தின் 43 (1) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்.

5. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் சபைத் தலைவருக்கு ஒப்படைக்கப்பட்ட ஒழுங்கு முறைப்படி அவற்றினை கோவைப்படுத்த வேண்டும்.

6. பிரேதம் எரித்தல் தொடர்பாக பொறுப்பேற்கப்படும் பட்சத்தில் அதற்கான குறித்த கட்டணத்தினையும் ரூபா 1000 வைப்புப் பணத்தினையும் அறவிட்டு அனுமதிப்பத்திரத்தை விண்ணப்ப தாரிக்கு வழங்க வேண்டும். தகனக் கூட பொறுப்பாளருக்கு பிரேதத்தினை ஒப்படைக்க வேண்டிய நேரம் அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

7. பிரேதம் எரித்தல் தொடர்பாக பொறுப்பேற்கப்படாத பட்சத்தில் அது தொடர்பாக விளக்கத்துடன் விண்ணப்பதாரிக்கு எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும்.

8. ஒவ்வொரு நாளும் காலை 6.30 மணி முதல் மாலை 7.00 மணி வரை தகனம் தொடர்பாக பிரேதம் ஏற்றுக்கொள்ளப்படும்.

9. அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்தில் அல்லது அதற்கு முன்னர் பிரேதத்தினை பிரேத தகனக் கூடத்தில் ஒப்படைக்க வேண்டும் நேரம் கடந்து ஒப்படைப்பதால் ஏற்படும் அசௌகரியங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பாக பிரதேச சபை பொறுப்பேற்காது.

10. தகனக்கூடத்தில் எரிக்கப்படும் ஒவ்வொரு பிரேதம் தொடர்பாகவும் விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் விலாசம் உயிரிழந்த நபரின் பெயர் மற்றும் அவர் வசித்த விலாசம் இறந்தவருக்கும் விண்ணப்பதாரிக்கும் இடையில் காணப்படும் உறவு முறை மற்றும் எரிக்கப்பட்ட திகதியும் நேரமும் தகனக் கூட பொறுப்பாளர் கோவைப்படுத்தப்பட வேண்டும்.

11. 1975 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க திருமணம், பிறப்பு மற்றும் இறப்பு (திருத்தப்பட்ட) சட்டத்தின்படி திருத்தப்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு பதிவு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளரால் வழங்கப்பட்ட இறப்பு பதிவுச் சான்றிதழ் அல்லது குறித்த பிரிவின் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட சான்றிதழ் இன்றி எந்தவொரு பிரேதத்தினையும் எரித்தல் கூடாது.

12. பிரேதத்தினை எரிக்கும் பொருட்டு தகனக்கூடத்தினை ஒதுக்கும் சந்தர்ப்பத்தில் பிரேதத்தினை எரித்தவுடன் அஸ்தியினை சேகரிக்கும் பொருட்டு இறந்தவரின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்பட்ட பாத்திரத்தை விண்ணப்பதாரர் அல்லது இறந்தவரின் நெருங்கிய உறவினர் பிரேத தகனக்கூட பொறுப்பாளருக்கு ஒப்படைக்க வேண்டும்.

13. தகனக்கூடத்தில் இருந்து அகற்றப்படும் அஸ்தி 12 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி குறித்த பாத்திரத்தில் இட்டு சடங்குகள் மேற்கொள்ளப்படும் இடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும்.

14. தகனக்கூடத்தில் வைக்கப்படடிருக்கும் அஸ்தி பாத்திரத்தினை 14 நாட்களுக்கும் உரிய நபர்கள் பொறுப்பேற்காத பட்சத்தில் அல்லது அது 12 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய இடம்பெறாத பட்சத்தில் 14 நாட்களுக்கு பிறகு சடங்குகள் இடம்பெறும் இடத்தில் பிரதேச சபையினால் புதைக்கப்படும்.

15. அகற்றப்படும் அஸ்தி விண்ணப்பதாரர் அல்லது இறந்தவரின் நெருங்கிய உறவினர் தவிர்ந்த ஏனையோருக்கு வழங்கக் கூடாது.

16. தகனக்கூடம் தொடர்பாக சபை தலைவர், பொறுப்பாளரையும் உதவியாளரையும்காவலாளரையும்சப்ரகமுவ மாகாண சபையில் இருந்து நியமிக்க வேண்டும்.

17. தகனக்கூட பொறுப்பாளர் தகனக்கூடத்தினையும் அதனை அண்டிய பிரதேசத்தினையும் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்க வேண்டும்.

18. சபை தலைவர் மற்றும் செயலாளரால் நியமிக்கப்படும் கடமைகளை தகனக்கூட பொறுப்பாளர் சரிவர மேற்கொள்ளல் வேண்டும்.

19. சபைத் தலைவரின் அல்லது தகனக்கூட பொறுப்பாளரின் அனுமதியின்றி தகனக்கூடத்தினும் யாரேனும் செல்வது குற்றமாகும் ஆனால் பிரேத தகனம் தொடர்பாக அனுமதி பெற்ற நபருடன் வரும் நபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

20. மேலே 8 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு புறம்பாக எவரும் பிரேத எரிப்பு கூடத்திற்கு வருதல் கூடாது மற்றும் பிரேத எரிப்பு நடவடிக்கைகளின் பின்னர் எவரும் அங்கு தங்கக் கூடாது.

21. சமாதானத்திற்கு அல்லது பிரேத எரிப்பு நடவடிக்கைகளுக்கு எவரேனும் இடையூறு மேற்கொள்ளும் பட்சத்தில் அவரை பிரேத தகனக் கூடத்தில் இருந்து வெளியில் அனுப்ப தகனக்கூட பொறுப்பாளருக்கு உரிமை உண்டு.

22. இறந்தவருக்கு இறுதி மரியாதை அளிக்க வந்தவர்கள் தகனக் கூடத்தில் உள்ள நினைவு கட்டுமானங்கள் மற்றும் தகனக்கூட கட்டிடங்கள், அதன் சொத்துக்கள் மற்றும் இறந்தவருக்கு அகௌரவம் ஏற்படும் விதத்தில் நடக்கக் கூடாது.

23. 22 ஆம் பிரிவினை மீறும் எவரும் மயானம் மற்றும் அதனைச்சார்ந்த சட்டங்களின் படி தண்டிக்கப்படுவர்.

24. தகனக்கூடத்தினுள் அமைந்துள்ள கட்டுமானங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தல் அதில் கடமையாற்றும் ஊழியர்களது சேவைக்கு தடையாக இருத்தல் அவர்களை மிரட்டல் அல்லது தகனக் கூடத்தின் சுற்றுப்புறத்தினை அலங்கரித்தல் குற்றமாகும்.

25. தகனக் கூடத்தினை ஒதுக்கிய நார்களால் மேலே 24 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் சந்தர்ப்பத்தில் சபை தலைவரால் குறிப்பிடப்படும் நட்ட ஈட்டை எரிப்பு கூடத்தை ஒதுக்கியவர் செலுத்த வேண்டும்.

26. இத்துணைச் சட்டத்தில் 20, 24, 25 ஆம் பிரிவுகளை மீறுதல் குற்றமாகும் அத்துடன் அது தொடர்பாக ஒருவர் நீதிமன்றம் ஒன்றில் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்படும் பட்சத்தில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 (2) பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் தண்டனைகளுக்கு உள்ளாவார்.

27. பூதவுடலினை எரிக்கும்போது அல்லது எரிப்பதற்கு முன்னர் இயந்திரங்களில் யாதேனும் கோளாறுகள் இடம்பெற்று அல்லது மின் துண்டிப்பு இடம்பெற்று பிரேத தகன நடவடிக்கைகள் கால தாமதமாகும் சந்தர்ப்பங்களில் அதனை எரித்தல் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமை சபை தலைவருக்கே உரியது மேலும் இத் துணைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிறாத ஏற்பாடுகள் ஏதேனும் இருப்பின் அது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமையும் சபை தலைவருக்கே உரியது.

28. பூதவுடல் தகன கட்டணம் பிரதேச சபையின் முன்மொழிதல் வழிமொழிதல் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதுடன் அவ்வாறு விதிக்கப்படும் கட்டணங்களில் பிரதேச சபையினால் திருத்தங்கள் மேற்கொள்ள எண்ணும் சந்தர்ப்பங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளவும் முடியும்.

29. சொற்கள் பொருந்தாத சந்தர்ப்பங்களைத் தவிர இத்துணைச் சட்டத்தில் சபை எனப்படுவது பலாங்கொடை பிரதேச சபையும்,

சபைத்தலைவர் என குறிப்பிடப்பட்டிருப்பது பலாங்கொடை பிரதேச சபையின் தலைவரையும், செயலாளர் எனப்படுவது பலாங்கொடை பிரதேச சபையின் செயலாளரும்,

தகனகூட பொறுப்பாளர் எனப்படுவது பலாங்கொடை பிரதேச சபையின் பிரேத தகன கூட பொறுப்பாளரும் ஆகும்.

பூதவுடல் எனப்படுவது மனித சடலமும் ஆகும்.

30. இத்துணைச் சட்டத்தின் தமிழ் மற்றும் ஆங்கில மொழி பெயர்ப்புக்களில் யாதேனும் பிழைகள் இருப்பின் சிங்கள மொழியின் அச்சிடப்பட்டிருக்கும் துணைச் சட்டம் இறுதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

"அ" பட்டியல்

**பலாங்கொடை பிரேத தகனகூடத்தில் பிரேதங்களை தகனம் செய்தல் தொடர்பான விண்ணப்பம்**

01. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :-----.
முகவரி :-----.
தேசிய அடையாள அட்டை இல. :-----.
கிராம சேவையாளர் பிரிவு :-----.

02. இறந்தவரின் பெயர் :-----.
வதிவிட முகவரி :-----.
கிராம சேவையாளர் பிரிவு :-----.
தேசிய அடையாள அட்டை இல. :-----.

03. இறந்தவருக்கும் விண்ணப்பதாரர்களுக்கும் உள்ள உறவுமுறை :-----.

04. மரணச் சான்றிதழின் இலக்கம் மற்றும் திகதி :-----.

05. மரணத்தை பதிவுசெய்த செயலாளரின் பெயர் மற்றும் முகவரி :-----.

06. மரணம் இடம்பெற்ற விதம் :-----.

07. மரணம் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருப்பின் திகதி, நேரம் :-----.

08. விசாரணை மேற்கொண்ட அதிகாரியின் பெயர் மற்றும் பதவி :- ----.

09. விசாரணை மேற்கொண்ட அதிகாரியின் முடிவு :-----.

10. பூதவுடலினை எரித்தல் தொடர்பான அனுமதி :-----.

11. தகனம் மேற்கொள்ளும் திகதி மற்றும் நேரம் :-----.

12. தகனத்தின் பின்னர் அஸ்தியினை சேமித்து வைக்கும் பெயர், முகவரி இடப்பட்ட பாத்திரம் உண்டு/ இல்லை:-----.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் உண்மையானது என உறுதியளிக்கிறேன். அத்துடன் எனது தேசிய அடையாள அட்டையின் பிரதியினையும் மரணச் சான்றிதழின் பிரதியினையும் இணைத்துள்ளேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :-----.

**அலுவலக தேவைகளுக்காக**

01. அனுமதிப்பத்திரம் வழங்களை அனுமதிக்கிறேன்/அனுமதிக்க வில்லை

20....................... திகதி மு. ப. /பி. ப. .......................... மணிக்கு பிரேத தகன கூடத்தில் ............................. என்பவரின் பூதவுடல் தகனத்தினை அனுமதிக்கின்றேன்.

02. கீழ்காணும் காரணங்களுக்காக அனுமதிப் பத்திரம் வழங்கலை இரத்து செய்கிறேன்.

..................................................................................................
..................................................................................................
..................................................................................................

கையொப்பம்
சபை தலைவர் /அதிகாரம் பெற்ற அலுவலர்.

திகதி :-----.

**சபை தலைவர் /அதிகாரம் பெற்ற அலுவலர்**

01. ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 20............. திகதி...................... இல. .......................... உடைய பற்றுச்சீட்டில் ரூபா .................................... ஆகவும் பிரேத தகன கட்டணமாக மற்றும் வைப்பாக ரூ ........ வும் அறவிடப்பட்டது.

02. அனுமதிப்பத்திரத்தை கையொப்பம் பெறும் பொருட்டு முன்வைக்கின்றேன்.

03. வேண்டுகோளினை மறுப்பதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகளை அடங்கிய கடிதத்தை கையொப்பத்திற்காக முன்வைக்கிறேன்.

------,
விடயப் பொறுப்பு அலுவலர்.

திகதி :-----.

11-655

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.